## வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்திற்கு எதிராக

# ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, நவ.4 -

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தையொட்டி வெளியிட்ட வலைதளப்பதிவில், “SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!” என்று வலியுறுத்தியுள்ளார்.

முதல்வர் அவர்களின் வலைதளப்பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் SIRக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!**

**வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை ECI ஏற்காததால், உச்சநீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்.**

**அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் SIR குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நாமக்கல் மாநகராட்சி, பழைய அரசு மருத்துவமனையில் ரூ.3.34 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை திறந்து வைத்து, சித்த மருத்துவமனை மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் பிற பணிகளில் பணியாற்ற உள்ள மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணி ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., இந்திய மருத்துவம் (ம) ஹோமியோபதி துறை ஆணையாளர் திருமதி.மு.விஜயலட்சுமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி., பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ., மேயர் து.கலாநிதி உட்பட பலர் உள்ளனர்.





